**_ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்_**
**_சாதாரணக் கூட்டம்_**

**2020** *ம் ஆண்டு மே மாதம்* **29** *ம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல்* **4.00** *மணியளவில் நடைபெற்ற* ***_சாதாரணக்_*** *கூட்ட நடவடிக்கைகள்.*

***முன்னிலை :- திரு. ப. சத்தியநாதன் B.S.C,***
***தனி அதிகாரி.***

**_பொருள் எண் : 514_**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் மே 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :- பார்வையிட்டு பதியப்பட்டது.**

**_பொருள் எண் : 515_**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :- பார்வையிட்டு பதியப்பட்டது.**

**_பொருள் எண் : 516_**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி நகர் நல அலுவலர் அவர்களின் மே 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :- பார்வையிட்டு பதியப்பட்டது.**

**_பொருள் எண் : 517_**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 09, ரைட்டன்பட்டியில் உள்ள அரசு (ஆதிந) மாணவியர் விடுதி கட்டிடம் முழுவதும் பழுதடைந்து விட்டதால், விடுதியில் உள்ள மாணவிகளை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்திரவின்படி இடையன்குளம் அரசு ( ஆதிந) உயர் நிலைப்பள்ளிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், அரசு மாணவியர் விடுதி குடிநீர் இணைப்பை ( இணைப்பு எண் 130/4164) ஐ துண்டிக்க திருமதி. வீ. முத்து மீனாட்சி விடுதி காப்பாளினி அவர்கள் மனு செய்துள்ளார். எனவே அரசு ( ஆதிந) மாணவியர் விடுதி குடிநீர் இணைப்பை நகராட்சி சட்டம் 1920 பிரிவு 134 (a) படி துண்டிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 6234/19/ இ2

**தீர்மானம் :- அனுமதிக்கப்பட்டது.**

**_பொருள் எண் : 518_**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகிலுள்ள இரு சக்கர வாகன காப்பகம் மற்றும் உழவர் சந்தை அருகில் உள்ள இரு சக்கர வாகன காப்பகத்தினை மூன்றாண்டு அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. மேற்கண்ட இரு சக்கர வாகன காப்பகத்தின் குத்தகை காலமானது கடந்த 31.03.2020 ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில் மேற்கண்ட இரு சக்கர வாகன காப்பகத்தினை குத்தகைக்கு விடும் நடவடிக்கையாக ஐந்து முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஐந்தாவது முறை மட்டுமே இரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினில் கடந்த ஆண்டு ஒப்பந்தப்புள்ளி தொகையினை விட சுமார் 2.63 லட்சம் குறைவாகவே வரப்பெற்றுள்ளது. நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு அரசு மருத்துவமனை அருகில் உள்ள இரு சக்கர வாகன காப்பகத்திற்கு பதிலாக நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்தும் வகையில் 26 எண்ணம் திறந்த வெளி கடைகள் அமைத்து வாடகை முறையில் குத்தகைக்கு விடும் பொருட்டு மேற்கண்ட கடைகளுக்கு ( Pre Auction ) முன் பொது ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி விடுவதற்கு முன் பொது ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடுவதற்கு ஆகும் விளம்பர கட்டணம் வழங்குவதற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 1988/2020/ அ 2

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 519</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகிலுள்ள இரு சக்கர வாகன காப்பகம் மற்றும் உழவர் சந்தை அருகில் உள்ள இரு சக்கர வாகன காப்பகத்தினை மூன்றாண்டு அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. மேற்கண்ட இரு சக்கர வாகன காப்பகத்தின் குத்தகை காலமானது கடந்த 31.03.2020 ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில் மேற்கண்ட இரு சக்கர வாகன காப்பகத்தினை குத்தகைக்கு விடும் நடவடிக்கையாக ஐந்து முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஐந்தாவது முறை மட்டுமே இரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினில் கடந்த ஆண்டு ஒப்பந்தப்புள்ளி தொகையினை விட சுமார் 2.63 லட்சம் குறைவாகவே வரப்பெற்றுள்ளது. நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு உழவர் சந்தை அருகில் உள்ள இரு சக்கர வாகன காப்பகத்திற்கு பதிலாக நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்தும் வகையில் 12 எண்ணம் மீன் கடைகள் அமைத்து வாடகை முறையில் குத்தகைக்கு விடும் பொருட்டு மேற்கண்ட கடைகளுக்கு ( Pre Auction ) முன் பொது ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி விடுவதற்கு முன் பொது ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடுவதற்கு ஆகும் விளம்பர கட்டணம் வழங்குவதற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 1988/2020/ அ 2

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 520</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் டேங்கர் லாரி வாகன எண் TN 67 V 1954 வாகனத்திற்கு 2020-21 ஆம் ஆண்டுக்கு சாலைவரி மற்றும் பசுமைவரி செலுத்துவதற்கான செலவினம் ரூ.4500/- ஐ குடிநீர் வடிகால் நிதி 2020-21 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) அனுமதிக்கலாம்.
2) குடிநீர் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந. க. எண் 1984/2020/ இ1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 521</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 30 மடவார்விளாகம் சிவன் கோவில் எதிர்புறம் உள்ள ஆணையாளர் குடியிருப்பின் முன்புறம் அலுவலக கோப்புக்கள் ஆய்வு செய்யவும், பணியாளர்களுடன் நகராட்சி பணிகுறித்து கலந்தாய்வு செய்திட வசதியாக அலுவலக அறை கட்டும் பணியை ரூ.9.95 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தீர்மான எண் 512 நாள் 30.04.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 20.05.2020 ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|
| 1 | Secretary,<br>R.A. 267 Srivilliputtur Block Agro Engg & Service Co-op Centre Ltd,<br>62 A, Madavar Vilagam Pillaiyar Kovil St, Srivilliputtur | 0.16% குறைவு |
| 2 | Secretary,<br>S.P. SPL 166 Watrap Agro engg and service Co-op Centre Ltd, Watrap. | 0.71% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.16% சதவிகிதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள R.A.267 Srivilliputtur Block Agro Engg & Service Co-op Ltd Srivilliputtur நிறுவனம் தந்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண் 1951 / 2020 / E1

**தீர்மானம் :-** **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 522**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி செண்பக தோப்பு தண்ணீர் தலைமை நீரேற்று நிலையத்தில் திறந்த வெளி கிணறு 3HP, 12.5 HP சப்மெர்சிபல் மோட்டார் பழுது நீக்கும் பணியை ரூ.33,500/- மதிப்பீட்டில் மேற்கொள்ள குடிநீர் பணி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 07.04.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள், அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 9.4.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. எம். முத்துராமகிருஷ்ணன்,<br>நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>24/1/1. பெருமாள்பட்டி பிள்ளைமார் சந்து மேலத் தெரு,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 33000/- |
| 2 | திருமதி. ஜி.எ. முத்துலட்சுமி,<br>நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>18 A, செட்டியக்குடித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 34650/- |
| 3 | திரு. கே. தங்கவேல், ஒப்பந்தக்காரர்,<br>கொத்தன்குளம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா. | 36300/- |

**அலுவலகக்குறிப்பு:-** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தொகை ரூ.33,000/- திரு.எம். முத்துராமகிருஷ்ணன், ஒப்பந்தக்காரர் அளித்துள்ள விலைப்புள்ளியை குடிநீர் பணி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.
ந.க.எண் 1745-2 / 2020 / E2

**தீர்மானம் :-** **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 523**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் BOV வாகனங்களுக்கு பேட்டரி சார்ஜர் பொருத்தும் பணி அம்மா உணவகத்தில் குடிநீர் கசிவு பணி கழிப்பறை புதுப்பித்தல் மற்றும் பேருந்து நிலையத்தில் குடிநீர் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் போன்ற பணிகளை ரூ.55000/- மதிப்பீட்டில் செய்ய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 07.05.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 13.05.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தக் காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. அ. பாபு, நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>சின்ன கடை பஜார், ஸ்ரீவில்லிபுத்தூர். | 51643/- |
| 2 | திரு. எம். சிவக்குமார், நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>கூனங்கும் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 56630/- |
| 3 | திரு. டி. சுந்தரமூர்த்தி,<br>சின்னக்கடை வீதி, மதுரை ரோடு,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 55780/- |

**அலுவலகக்குறிப்பு:-** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.51,643/- குறைவான விலைவிகிதம் திரு.அ.பாபு ஒப்பந்தக்காரர் அளித்துள்ள விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் 1745 / 2020 / E1

**தீர்மானம் :-** **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 524</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி செண்பக தோப்பு தண்ணீர் தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழ்துளை கிணறு எண் 3 மற்றும் 7 ஆகிய இரண்டு கிணறுகளுக்கு இரண்டு எண்ணம் 5 HP சப்மெர்சிபல் மோட்டார் பொருத்தும் பணி ரூ.1,40,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள குடிநீர் பணி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் 09.04.2020 ம் தேதி அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி மேற்கண்டுள்ள வேலைக்கு 15.04.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூனறு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. எம். முத்துராமகிருஷ்ணன்,<br>நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>24/1/1. பெருமாள்பட்டி பிள்ளைமார் சந்து மேலத் தெரு,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 119119.90/-<br>( மதிப்பீட்டு விலையில் ) |
| 2 | திருமதி. ஜி.எ. முத்துலட்சுமி,<br>நகராட்சி ஒப்பந்தக்காரர்,<br>18 A, செட்டியக்குடித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 125076/- |
| 3 | திரு. கே. தங்கவேல், ஒப்பந்தக்காரர்,<br>கொத்தன்குளம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா. | 131328/- |

**அலுவலகக்குறிப்பு:-** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையில் விலைப்புள்ளி தொகை ரூ.119119.90/- திரு. எம். முத்துராமகிருஷ்ணன், ஒப்பந்தக்காரர் அளித்துள்ள விலைப்புள்ளியை குடிநீர் பணி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் 1745-1 / 2020 / E2

**தீர்மானம் :-** **குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 525</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மஜீத் நகர் தெரு பணியாளர் குடியிருப்பு மற்றும் கோட்டைப்பட்டி மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகம் ஆகிய இரு இடங்களில் கன மழை மற்றும் பலத்த காற்றுடன் ஒடிந்து விழுந்த கிளைகள் மற்றும் பட்டுப்போன இரு வேப்ப மரங்களை வெட்டி அப்புறப்படுத்தியும் கோட்டைப்பட்டி மேல்நிலை தொட்டி வளாகத்தில் பயன்பாடற்ற பட்டுப்போன மரக்கட்டைகளை எடுத்துக் கொள்ள 28.05.2020 அன்று பொது ஏலம் நடைபெற்றது. மேற்படி பொது ஏலத்தில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டு கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஏலதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. அ. சடையப்பன்,<br>4, செட்டியக்குடித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 7000/- |
| 2 | திரு. கோ. வெங்கடேசன், நகராட்சி ஒப்பந்தகாரர்,<br>131 A,/54 மேட்டு கடைசி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 6800/- |

**அலுவலகக்குறிப்பு:-** பொது ஏலத்தில் கலந்து கொண்ட இரு ஏலதாரர்களில் அதிக பட்ச ஏலத்தொகை ரூ.7000/- ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு. அ. சடையப்பன், ஏலதாரரின் ஏலத்தொகையை ஏற்று அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
ந. க. எண் 1963/2020/E1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 526**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற 2012-13 முதல் 2016-17 முடிய உள்ள சேமநல நிதி வட்டித் தொகையினை பிரித்து வழங்குவதற்கு பெறப்பட்ட கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Star Systems services,<br>2/42 A, Sannachipatti , Sivakasi. | 19700/- |
| 2 | Genius,<br>103 A, Jawulikadai st, Sivakasi. | 19900/- |

**அலுவலகக்குறிப்பு:-** அனுமதிக்கலாம். பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Star Systems services, Sivakasi என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
ந. க. எண் 8106/2002/B1

**தீர்மானம் :-** **குறைந்த விலைப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 527**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 21, பிளாக் எண் 11, சர்வே எண் 1099/2 இடத்திற்கு வரைபடம் திருத்தம் மற்றும் பட்டா வழங்குவது தொடர்பாக திருமதி. மு. சுப்பம்மாள் சார்பு நீதிமன்றத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் வழக்கு எண் இ.ம.எண் 1/2019 வழக்கு தொடுத்துள்ளார். மேலும் மேல் முறையீடு மனுவிற்கு நகர்மன்ற வழக்கறிஞர் திரு. ச. சௌந்திரராஜன் அவர்களால் எதிர்வாதுரை தயார் செய்யப்பட்டுள்ளது. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.3000/- செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந. க. எண் 7437/2019/F1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 528**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 03, பிளாக் எண் 07, சர்வே எண் 912/6 பொது நடைபாதை ஆக்கிரமிப்பது தொடர்பாக முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் எண்ணில் வழக்கு தொடுத்துள்ளார். நகர்மன்ற வழக்கறிஞர் திரு. சௌந்திரராஜன் அவர்கள் மூலம் எதிர் உரை தயார் செய்த செலவு தொகை வழக்கு கட்டணம் ரூ.2500/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந. க. எண் 6878/2019/F1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 529</u>**

அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோவிலுக்கு சொந்தமான நாட்சியார் வடக்கு மாடவீதியில் உள்ள யானை மகால் கட்டிடத்தினை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி கிளைக்கு வாடகைக்கு விடப்பட்டு பாரத ஸ்டேட் வங்கி கடிதம் நாள் 22.08.2020 ன் படி 31.08.2002 ம் தேதி வங்கியை காலி செய்து சாவியை ஒப்படைத்து விட்டதால் 01.09.2002 ம் தேதி முதல் மேற்படி கட்டிடம் காலியாக இருந்ததை ஒட்டி சொத்துவரியை ரத்து செய்ய வேண்டி அருள்மிகு நாட்சியார் (ஆண்டாள்) திருக்கோவில் தக்கார் தீர்மான எண் 1 நாள் 05.03.2020 செயல் அலுவலரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 25 வது வார்டு கதவு எண் 49/24 நாட்சியார் வடக்குமாடவீதி, சொத்துவரி விதிப்பு எண் 130/025/00461 உள்ள கட்டிடம்ம தற்போது திருக்கோவில் பூஜை திருவிழா ஏற்பாடு வகைகளுக்காக உபயமாக வழங்கப்பட்ட பெண் யானையை வைத்து பராமரிக்கப்பட்டு வருவதாலும், அதன் ஒரு பகுதியில் 23x28 என்ற அளவில் யானை பாகன் குடும்பத்துடன் வசித்து வருவதால் அந்த பகுதிக்கு குடியிருப்புக்கான புதிய வரிவிதிப்பு செய்து பழைய வரிவிதிப்பு எண் வணிக பயன்பாட்டிற்கு விதிக்கப்பட்டுள்ளதால் 130/025/00461 ஐ 01.04.2020 முதல் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 530</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அம்மா உணவகம் பின்புறம் மற்றும் நகராட்சி அலுவலக வளாகத்தில் பட்டுப்போன இரண்டு வேப்ப மரங்கள் 30.04.2020 அன்று பெய்த கன மழையால் ஒடிந்து அம்மா உணவக கட்டிடத்தில் விழுந்து விட்டது. மேற்படி இரண்டு வேப்பமரங்களை வெட்டி அப்புறப்படுத்திக் கொள்ள 04.05.2020 அன்று பொது ஏலம் நடைபெற்றது. மேற்படி பொது ஏலத்தில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டு கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஏலதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு. M.B. மாரியப்பன், த/பெ. பாலு,<br>274, மாதாங் கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 3500/- |
| 2 | திரு. ஜெகநாதன், த/பெ. சந்தன பிச்சை,<br>சீனியாபுரம் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 3400/- |

**அலுவலகக்குறிப்பு :-** பொது ஏலத்தில் கலந்து கொண்ட இரு ஏலதாரர்களில் அதிகபட்ச ஏலத் தொகை ரூ.3500/- ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு. M.B. மாரியப்பன் ஏலதாரரின் ஏலத் தொகையை ஏற்று அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந. க. எண் 1963/2020/E1**

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 531</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி செண்பக தோப்பு தண்ணீர் தலைமை நிலையத்தில் கிணறு எண் 2,3,5 மற்றும் 6 infiltration கிணறுகளில் தூர் வாரி சீர் செய்யும் பணியை ரூ.1.50 இலட்ச மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் நிதி 2020-21 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

ந. க. எண் 1984/2020/E1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 532**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் கசடு கழிவு நீர் வெளியேற்றும் மையம் FSTP பணிக்கு மட்டமானி ( Levelling Instrument ) மற்றும் நகராட்சி சாலைகள் நீளம் மற்றும் அகலம் அளப்பதற்கு சாலை அளவு மானி Road Meeter போன்ற சாதனங்கள் வாங்குவதற்கு உத்தேச மதிப்பு ரூ.26550/- ஐ குடிநீர் வடிகால் நிதி 2020-21 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 1984/2020/E1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 533**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைப்பட்டி தரைமட்ட தொட்டிக்கு வரப்படும் குடிநீரை நீரேற்றம் செய்யும் 20 HP மோட்டார் பழுது நீக்கப் பணியை ரூ.50000/- மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் நிதி 2020-21 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 1984/2020/E1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 534**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய் மற்றும் பீடர் லைனில் உள்ள வால்வுகளை சீர் படுத்தும் பணியை ரூ.3.50 இலட்ச மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் நிதி 2020-21 ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** குடிநீர் சீரான முறையில் வழங்கிட ஏதுவாக இப்பணியினை அனுமதிக்கலாம்.
ந. க. எண் 1984/2020/E1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 535**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி உள்ளூர் குடிநீர் திட்டம் பேயனாற்று படுகையில் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்துளை கிணறு மோட்டார்கள் குடிநீர் வடிகட்ட இயக்கும் மோட்டார் நகராட்சி அலுவலக வடக்குப் பக்கம் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு நீரேற்றம் செய்யும் மின் மோட்டார்கள் கோட்டைப்பட்டி மேல்நிலைத் தொட்டிக்கு நீரேற்றம் செய்யும் மின் மோட்டார்கள் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை ஆண்டு பராமரிப்பு 2020-2021 ஆம் ஆண்டுக்கு குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் ரூ.9.80 இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மான எண் 402 நாள் 31.01.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 27.02.2020 ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ராயல் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>73 H/A, ராமகிருஷ்ணாபுரம் பைபாஸ் ரோடு,<br>ஸ்ரீவில்லிபுத்தூர். | 7.72 % குறைவு |
| 2 | திரு. எஸ். பிரபுராம்,<br>25, பெருமாள்பட்டி கோட்டைத்தலைவாசல் கிழக்கு தெற்கு தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 3.51 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 7.72 % ஸ்ரீ ராயல் எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது என்றாலும் தற்போது ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள நீரேற்றும் அனைத்து மின் மோட்டார்கள் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேலும் நீரேற்றம் செய்யும் மின் மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளுக்கு ஏற்ப பணி மேற்கொள்ளலாம். இந்த ஒப்பந்தப்புள்ளியை நகராட்சியின் நிதிநிலை கருதி ரத்து செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.
**ந. க. எண் 536/2020/E1**

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 536**

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்களின் கடிதத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்களின் கடித எண் DEE/TNPCB/VNR/UBL 2020-2, Dated:26.04.2020 ன் படி கொரோனா தொற்று தொடர்பாக உருவாகும் மருத்துவ கழிவுகளை சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டத்தின் மருத்துவ கழிவுகள் மேலாண்மை 2016 ன் படி வெளியேற்றுவது குறித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் சேகரமாகும் மருத்துவ கழிவுகளை தினசரி சேகரித்து முறையாக அப்புறப்படுத்த ராம்கி எனர்ஜி அன்ட் என்விரான்மெண்ட் லிமிடெட் நிறுவனத்தின் விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ளவாறு மாதாந்திர கட்டணம் ரூ.20,000/- தினசரி 15 கிலோவிற்கும் உட்பட்டும், கூடுதலாக சேகரமாகும் மருத்துவ கழிவுகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ள கட்டணம் ரூ.52/- ( கிலோ ஒன்றுக்கு ) என்ற விகிதத்தில் மதுரை ராம்கி எனர்ஜி அன்ட் என்விரான்மெண்ட் லிமிடெட் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** 1 ) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் SDRF மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
ந.க.எண் 9/2020/H1.

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 537**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN-67-K-9704 டிராக்டர் இன்ஜின் மற்றும் டிரைலர் TN-84-4592 க்கு தகுதி சான்று பெறுவதற்குரிய பணிகள் மேற்கொள்ள மன்ற தீர்மான எண் 483 நாள் 30.04.2020 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 20.05.2020 ம் தேதி கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | விலை விகிதம் | |
|---|---|---|---|
| வ.எண் | வேலைகளின் விபரம் | RA 267 Sriviliputtur Block Agro Engg Service and Co-op Centre, Sriviliputtur. | Sp.Spl 177 Rajapalayam Agro Engg Service and Co-op Centre, Rajapalayam. |
| 1 | TN 67 K 1273 க்கு தகுதி சான்று பெறும் பணி | 62500/- | 64950/- |

**அலுவலகக்குறிப்பு :-** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் ரூ.62,500/- கொடுத்துள்ள RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op Centre என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம்.
ந.க.எண் 1869/2020/H2.

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 538**

உள்ளாட்சித் தேர்தல் **2011** மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் அச்சிட்டு வழங்கப்பட்ட இருப்பில் இருக்கும் தேர்தலுக்குமான வாக்குச் சீட்டுகள், தேர்தல் படிவங்கள், கையேடுகளை அழித்துவிட்டு அதன் மீது வரப்பெறும் தொகையினை உரிய தலைப்பில் செலுத்துமாறு சென்னை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய முதன்மை தேர்தல் அலுவலர் ( நகராட்சி ) அவர்களின் கடிதம் ந.க.எண் 3018/2016/ தே.பொ.1, நாள் 30.10.2018 மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் ( தேர்தல் ) கடிதம். ந.க.எண் 31099/18/R2, Dated: 28.05.2020 ன் படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் உள்ள 2011 மற்றும் அதற்கு முந்தைய ஆண்டு தேர்தல்களில் உள்ள படிவங்களை ஏலம் விடவும் அதற்கான தொகையின் உரிய அரசு தலைப்பில் செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

ந. க. எண் 2252/2019/C1

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 539**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 2020-21 ம் வருடத்திற்கு தேவையான எழுது பொருள்கள் மற்றும் கணிணி பிரிண்டர்கள் மற்றும் டோனர்கள் சப்ளை செய்வதற்கு 26.05.2020 ம் தேதி மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி ஒப்பந்தப் புள்ளிகளில் கீழ்கண்டவாறு உள்ளது மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Description | Quantity | The Sivakasi printers service industrial co-op society Ltd IND 745 | The Melegaram Printing workers industrial co-operative society Ltd IND No 923 | The Dharmapuri Dist Printers service industrial co-op society Ltd, IND |
|---|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி நிலுவை பதிவேடு | 1 NO | 1960 | 2050 | 2060 |
| 2 | சொத்துவரி மியூடேசன் பதிவேடு | 1 NO | 1830 | 1900 | 1920 |
| 3 | சேமநல நிதி பதிவேடு | 1 NO | 1820 | 1910 | 1930 |
| 4 | சேமநலநிதி வட்டி பதிவேடு | 1 NO | 1820 | 1910 | 1930 |
| 5 | சொத்துவரி செலான் | 1 NO | 580 | 600 | 620 |
| 6 | சேமநலநிதி கேஸ் புக் | 1 NO | 1190 | 1300 | 1320 |
| 7 | Priced Store Ledger | 1 NO | 990 | 1050 | 1070 |
| 8 | Material indent & issue book | 1 NO | 990 | 1050 | 1070 |
| 9 | Street Light complaint Register | 1 NO | 990 | 1050 | 1070 |
| 10 | Long size 1 coyer Note | 1 NO | 275 | 280 | 295 |
| 11 | மூடுதாள் | 100 தாள் | 495 | 510 | 525 |
| 12 | கட்டிட விண்ணப்ப குறைபாடு அறிவிப்பு | 100 Nos | 900 | 910 | 930 |
| 13 | ஆக்கிரமிப்பு கேட்பு | 1 NO | 236 | 250 | 270 |
| 14 | நகர்மன்ற தீர்மான பதிவேடு | 1 NO | 1400 | 1600 | 1620 |
| 15 | Payment book ( MCF 6) | 1 NO | 755 | 770 | 785 |
| 16 | Receipt book ( MCF 4) | 1 NO | 755 | 770 | 785 |
| 17 | Pay bill Register | 1 NO | 1160 | 1300 | 1320 |
| 18 | ஊதிய உயர்வு பதிவேடு | 1 NO | 480 | 500 | 520 |
| 19 | பிறப்பு, இறப்பு பதிவு சான்று எ 4 படிவம் | 100 Nos | 630 | 650 | 670 |
| 20 | பிறப்பு இறப்பு சான்று விண்ணப்பம் | 1 NO | 275 | 290 | 300 |
| 21 | இறப்பு சான்று விண்ணப்பம் | 1 NO | 275 | 290 | 300 |
| 22 | சொத்துவரி பெயர் மாற்ற விண்ணப்பம் | 1 NO | 185 | 200 | 210 |
| 23 | D & O விண்ணப்பம் | 1 NO | 305 | 320 | 330 |
| 24 | பகிர்மான பதிவேடு 2 Q | 1 NO | 670 | 690 | 700 |
| 25 | தபால் அனுப்பும் பதிவேடு | 1 NO | 755 | 770 | 785 |
| 26 | பைல் பேடு | 1 NO | 76 | 90 | 100 |
| 27 | கவர் சின்னது | 100 Nos | 210 | 220 | 235 |
| 28 | கவர் பெரியது | 100 Nos | 260 | 280 | 300 |
| 29 | வருகைப் பதிவேடு | 1 NO | 340 | 360 | 375 |
| 30 | Running Note file | 1 NO | 415 | 430 | 450 |
| 31 | Building Register ( Mf 146 ) | 1 NO | 755 | 770 | 785 |
| 32 | Building Register ( Mf 146 A ) Lir | 1 NO | 755 | 770 | 780 |
| 33 | Birth report ( Rose color ) | 1 Pad | 445 | 475 | 490 |
| 34 | Death report form | 1 Pad | 445 | 475 | 490 |
| 35 | Water demand register | 1 NO | 2200 | 2300 | 2400 |
| 36 | குழந்தை பெயர் உறுதி மொழி படிவம் | 1 NO | 95 | 105 | 120 |
| 37 | சொத்துவரி கேட்பு அறிவிப்பு | 100 Nos | 146 | 175 | 190 |
| 38 | தற்செயல் விடுப்பு பதிவேடு | 1 NO | 340 | 360 | 375 |
| 39 | குடிநீர் கட்டணம் கேட்பு அறிவிப்பு | 1 NO | 170 | 190 | 200 |
| 40 | MDR Register | 1 NO | 1430 | 1480 | 1500 |
| 41 | Deposit Register ( 100 Page) | 1 NO | 1430 | 1480 | 1500 |
| 42 | Personal Register ( 100 page ) | 1 NO | 568 | 600 | 620 |
| 43 | Personal Register ( 50 page ) | 1 NO | 280 | 300 | 320 |
| 44 | M Book ( 100 page ) | 1 NO | 145 | 165 | 180 |
| 45 | M Book ( 50 page ) | 1 NO | 98 | 110 | 130 |
| 46 | துப்புரவு பணியாளர் வருகை பதிவேடு | 1 NO | 565 | 600 | 620 |
| 47 | Revenue fund chitta | 1 NO | 1430 | 1480 | 1500 |
| 48 | Water Supply Chitta | 1 NO | 1430 | 1480 | 1500 |
| 49 | Cheque Register | 1 NO | 480 | 500 | 520 |
| 50 | Advance recovery register | 1 NO | 480 | 500 | 520 |
| 51 | Receipt book | 1 NO | 755 | 770 | 785 |
| 52 | சொத்துவரி கணிணி அச்சு ரசீதுகள் | 1000 ரசீது | 2600 | 2900 | 3000 |
| 53 | சேவை மைய ரசீதுகள் | 1000 ரசீது | 2600 | 2900 | 3000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 54 | பணிப் பதிவேடுகள் | 1 NO | 155 | 175 | 190 |
| 55 | Tender Register | 1 NO | 480 | 500 | 520 |
| 56 | Allotment Register | 1 NO | 480 | 500 | 520 |
| 57 | கட்டிட அனுமதி விண்ணப்பம் அனுபந்தம் | 1 NO | 35 | 40 | 45 |
| 58 | Long size 2 coyar Note | 1 NO | 610 | 640 | 650 |
| 59 | நகராட்சி கருவூலக செலான் | 1 NO | 215 | 230 | 250 |
| 60 | D & O உரிமம் பதிவேடு | 1 NO | 680 | 710 | 730 |
| 61 | DCB பணியாளர் கணக்கெடுப்பு படிவம் | 1 NO | 215 | 225 | 240 |
| 62 | அம்மா உணவகம் இட்லி டோக்கன், சாம்பார் சாதம், தயிர் சாதம் டோக்கன். | 1000 Token | 160 | 170 | 180 |
| 63 | இ மெயில் ரோட் | 1000 Token | 755 | 770 | 785 |
| 64 | பதிவு தபால் நோட் | 1 NO | 755 | 770 | 785 |
| 65 | Petty Case Note | 1 NO | 480 | 500 | 520 |
| 66 | PF Register | 1 NO | 1430 | 1480 | 1500 |
| 67 | Asset Register | 1 NO | 1370 | 1400 | 1500 |
| 68 | Tools and plant Register | 1 NO | 380 | 400 | 420 |
| 69 | Stock Register | 1 NO | 810 | 850 | 870 |
| 70 | Condiment Register | 1 NO | 755 | 770 | 785 |
| 71 | Contractor Personal Register | 1 NO | 755 | 770 | 785 |
| 72 | | 1 NO | 755 | 770 | 785 |
| 73 | Street Light pole wart register MF 179 | 1 NO | 755 | 770 | 785 |
| 74 | CPS Register | 1 NO | 1430 | 1500 | 1600 |
| 75 | Name Transfer Register | 1 NO | 480 | 500 | 520 |
| 76 | பேருந்து நிலையம் நுழைவுக் கட்டணம் | 1 NO | 4 | 5 | 6 |
| 77 | ஆடு அடிக்கும் தொட்டி கட்டணம் | 1 NO | 4 | 5 | 6 |
| | Total | | **56612** | **59635** | **61302** |

வரப்பெற்ற 3 ஒப்பந்தப்புள்ளிகளில் The Sivakasi Printer Industrial Co-op Society Ltd, IND Sivakasi என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியானது மற்ற இரு ஒப்பந்தப்புள்ளியை காட்டிலும் குறைவாக உள்ளதால் The Sivakasi Printer Industrial Co-op Society Ltd, IND Sivakasi என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 1920/2020/B2

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 540**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 2020-21 ம் வருடத்திற்கு தேவையான எழுது பொருள்கள் மற்றும் கணிணி பிரிண்டர்கள் மற்றும் டோனர்கள் சப்ளை செய்வதற்கு 26.05.2020 ம் தேதி மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி ஒப்பந்தப் புள்ளிகளில் கீழ்கண்டவாறு உள்ளது மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Description | Quantity | The Sivakasi printers service industrial co-op society Ltd IND 745 | The Melegaram Printing workers industrial co-operative society Ltd IND No 923 | The Dharmapuri Dist Printers service industrial co-op society Ltd, IND |
|---|---|---|---|---|---|
| 1 | A4 Size Xerox paper TNPL | 1 Packet | 440 | 460 | 450 |
| 2 | FS size Xerox paper TNPL (A5) | 1 Packet | 520 | 545 | 530 |
| 3 | காங்கர் பேப்பர் | 1 Ream | 640 | 675 | 655 |
| 4 | CD with Bough ( R/W) | 1 No | 120 | 135 | 125 |
| 5 | CD with Bough | 1 No | 30 | 35 | 33 |
| 6 | Epson Dimities (1.2 1150 Cater age) | 1 No | 540 | 570 | 560 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | Epson Dimities Cater age (Fx 2175) | 1 No | 700 | 725 | 715 |
| 8 | Epson LQ 1310 Cater age | 1 No | 550 | 575 | 565 |
| 9 | HP Toner 1007 ( 88 A) | 1 No | 7900 | 8400 | 8100 |
| 10 | HP Toner 3015 ( 55 A) | 1 No | 22340 | 22700 | 22400 |
| 11 | HP Toner 1022 ( 12 A) | 1 No | 9990 | 10400 | 10100 |
| 12 | HP Toner Laser Jet ( 80 A) | 1 No | 15600 | 16300 | 16000 |
| 13 | HP Toner ( 78 A ) | 1 No | 9990 | 10400 | 10100 |
| 14 | HP Toner Common ( 925 A) | 1 No | 8080 | 8500 | 8200 |
| | | | **77440** | **80420** | **78533** |

வரப்பெற்ற 3 ஒப்பந்தப்புள்ளிகளில் The Sivakasi Printer Industrial Co-op Society Ltd, IND Sivakasi என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியானது மற்ற இரு ஒப்பந்தப்புள்ளியை காட்டிலும் குறைவாக உள்ளதால் The Sivakasi Printer Industrial Co-op Society Ltd, IND Sivakasi என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.
ந. க. எண் 1919/2020/B2

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 541**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 67 AQ 8749 JCB க்கு பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் நாள் 26.05.2020 ல் அனுமதிக்கப்பட்டதன் படி 29.05.2020 ம் தேதி கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. கீழ்க்கண்டவாறு மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

| வ.எண் | வேலைகளின் விபரம் | விலை விகிதம் | | |
|---|---|---|---|---|
| | | RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op Centre Srivilliputtur. | Sp. Spl 177 Rajapalayam Agro Engg service and Co-op centre, Rajapalayam | Sp.Spl 166 வத்திராயிருப்பு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிட், வத்திராயிருப்பு. |
| 1 | TN 67 AQ 8749 JCB க்கு பழுது நீக்கம் செய்யும் பணி | 29,000/- | 32,000/- | 33,000/- |

**அலுவலகக்குறிப்பு:-**

1) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் ரூரூ29,000/ கொடுத்துள்ள RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op centre என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந. க. எண் 2173/2020/ எச் 2

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 542**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 67 AX 5009 டிப்பர் லாரிக்கு தகுதிச் சான்று மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் நாள் 26.05.2020 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 29.05.2020 ம் தேதி கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. கீழ்க்கண்டவாறு மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

| வ.எண் | வேலைகளின் விபரம் | விலை விகிதம் | | |
|---|---|---|---|---|
| | | RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op Centre Srivilliputtur. | Sp. Spl 177 Rajapalayam Agro Engg service and Co-op centre, Rajapalayam | Sp.Spl 166 வத்திராயிருப்பு வேளாண்மை பொறியியல் கூட்டுறவு மையம் லிட், வத்திராயிருப்பு. |
| 1 | TN 67 AX 5009 டிப்பர் லாரிக்கு தகுதிச் சான்று பெறும் பணி | 40,800/- | 42,750/- | 43,950/- |

**அலுவலகக்குறிப்பு:-**

1) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் ரூ40,800/ கொடுத்துள்ள RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op centre என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந. க. எண் 2237/2020/ எச் 2

**தீர்மானம் :-** **அனுமதிக்கப்பட்டது.**